# அங்காடி

ஒவ்வொரு ஊர்களிலும் அங்காடிகள் இருக்கின்றன. அவை மக்களின் முதன்மைத் தேவையாகின்றன. அங்காடியில் நம் உணவுக்குத் தேவையான காய்கறிகள், கீரைவகைகள் மற்றும் மீன், இறைச்சி போன்றவையும் கிடைக்கும். அத்தோடு அரிசி, பருப்பு, கடலை போன்ற கூலங்களும் வாங்கக் கூடியதாக இருக்கும். இன்னொரு பக்கம் உடைகள், காலணிகள், கைப்பைகள் போன்ற மக்களுக்குத் தேவையான பொருட்களும் அங்கு விற்கப்படுகின்றன. அத்தோடு அங்கு நாங்கள் சுவைக்காகவும் நறுமணத்திற்காகவும் பயன்படுத்துகின்ற மிளகு, சீரகம், ஏலம், கராம்பு, மஞ்சள், உள்ளி, இஞ்சி போன்ற பலசரக்குகளும் கிடைக்கின்றன.

அங்காடி சில பகலிலும் சில இரவிலும் கூடுகின்றன. பகலில் கூடும் அங்காடி நாளங்காடி என்றும் இரவில் கூடும் அங்காடி அல்லங்காடி என்றும் அழைப்பர். அங்காடி பெரும்பாலும் கிழமைக்கு இரண்டுதடவை கூடுகின்றன. அங்காடியில் பொருட்கள் மலிவாக விற்பதனால் மக்கள் அதிகமாக அங்கு விரும்பிச் செல்கின்றனர்.